**எல்ல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 ஜுன் 18 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜுன் 10 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்டோபர் 20 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்ல பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 நிகர சொத்துக்களில் குறைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான நிகர சொத்துக்களது பெறுமதி ரூபா 9,338,204 ஆகும். முன்னைய ஆண்டு முடிவில் நிகர சொத்துக்களது பெறுமதி ரூபா 11,457,662 ஆகவிருந்தது. இதனால் நிகர சொத்துக்களில் ஏற்பட்ட குறைவு ரூபா 2,069,458 ஆகும்.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) மீளாய்வாண்டின்போது ஊவா உள்ளூராட்சித் திணைக்களத்தால் தொழில்களுக்கெனப் பெறப்பட்ட தொகை ரூபா 1,332,022 ஆகும். இது கொடுப்பனவு செய்ய வேண்டிய முத்திரைத் தீர்வை வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதால் ஆண்டிற்கான வருவாய் அதேயளவு குறைத்தும் கொடுப்பனவு செய்யவேண்டிய வைப்புக் கணக்கு மீதி அதேயளவு அதிகரித்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கு ரூபா 452,355 நிதியேற்பாடு செய்வதற்காக உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கில் வரவு வைத்தும் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டுமிருக்க வேண்டும். எனினும், 52 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 625,693 உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுமிருந்ததால் ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ள மீதி ரூபா 452,355 குறைவாகவும் உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கு மீதியில் ரூபா 173,338 குறைவாகவும் திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 625,693 அதிகரித்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த முற்பண மீதி ரூபா 100,000 ஆகும். இது ரூபா 896,209 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 142,541 கடை வாடகை நிலுவையானது ரூபா 69,289 ஆக ரூபா 73,252 குறைத்துக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டின் முடிவிலான வருவாய்க் கடன்பட்டோர் மீதி அதேயளவு தொகையால் நிதிசார் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபையின் பட்டோலைப் பிரகாரம், 2013 ஜுன் முதல் டிசெம்பர் வரைக்குமாக மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் ணம் ரூபா 800,007 ஆகும். எனினும், அது ரூபா 675,857 ஆக ரூபா 124,150 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு முடிவில் பெறவேண்டியிருந்த மூலதன உதவித் தொகை ரூபா 3,710,216 ஆகும். எனினும், அது ரூபா 4,325,029 ஆக ரூபா 614,813 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டில் 56 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலமான தவறைத் திருத்துவதாகக் குறிப்பிட்டு மீளாய்வாண்டில் 27 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் நிலுவையாக உள்ள தீர்வைக் கணக்கில் ரூபா 132,092 வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், முன்னைய ஆண்டில் குறித்த நாட்குறிப்பின் மூலம் அவ்வாறானதொரு சீராக்கல் கணக்கில் இடம் பெறாமையால் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான வருவாய்க் கடன்பட்டோர் மீதி மற்றும் திரண்ட நிதியக் கணக்கு மீதி என்பன அதேயளவு தொகையால் நிதிசார் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) முன்னைய ஆண்டுகளில் பெற வேண்டிய வருவாய் தொடர்பாக 47 ஆம் இலக்க நாட் குறிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடானது அவற்றைப் பெறும் தறுவாயில் கணக்கில் சீராக்கலுக்கு உட்படுத்தப்படவில்லை. இதனைத் திருத்துவதற்காக குறித்த வருவாய்த் தலைப்புகள் மற்றும் முன்னைய ஆண்டுகளில் அவை எவ்வாறு குறிப்பிலிடப்பட்டன என்பதை நிச்சயமாக இணங்காணாது ரூபா 1,106,864 திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் ஏனைய வருவாய் நிலுவைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 698,993 ஆனபோதும், பட்டோலையின் பிரகாரம் அது ரூபா 773,839 ஆக இருந்தமையால் ரூபா 74,846 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 12,946,463 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 16,916,489 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

விரிவான பட்டோலை, பொருட் கணிப்புச் சபை அறிக்கை, ஒப்படைப்பதற்கான கட்டளை என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 29,453,134 பெறுமதியான 6

கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2012 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1790 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டமும் | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் உள்ள 25 வியாபார நிறுவனங்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்படாததுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 13 வியாபர நிறுவனங்களது செல்லுபடிக் காலம் காலாவதியாகியும் இருந்தது. |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய சபைக்குரிய 19 கடைகளது மாதாந்த குத்தகை வாடகை அரச அல்லது உள்ளூராட்சி விலை மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 145,807 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 768,887 ஆகியமையால் நிதிசார் செலவினத்தின் நிகர குறைவு ரூபா 914,694 ஆகியது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 914,694 நிகர குறைவு அவதானிக்கப்பட்டது. அது தொடர்பான பகுப்பாய்வு பின்வருமாறு.

| மீண்டுவரும் வருவாய் | 2013 | 2012 | வேறுபாடு | |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையும் வரியும் | 6,934,196 | 5,071,707 | 1,862,489 | |
| வாடகை | 2,122,912 | 1,579,330 | 543,582 | |
| அனுமதிப் பத்திரம் | 559,850 | 1,123,875 | (564,025) | |
| சேவைக் கட்டணம் | 3,728,191 | 6,860,305 | (3,132,114) | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 440,677 | 723,045 | (282,368) | |
| பிற வருவாய் | 120,330 | 174,596 | (54,266) | |
| வருவாய்க்கான உதவி | 13,706,148 | 10,131,379 | 1,574,769 | |
| | | | | 1,948,067 |

**மீண்டுவருஞ் செலவினம்**

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளமும் படியும் | 19,459,011 | 16,158,852 | (3,300,159) | |
| பயணச் செலவினம் | 485,497 | 609,286 | 123,789 | |
| வழங்கலும் சேவைகளும் | 3,334,562 | 1,875,502 | (1,459,060) | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,662,216 | 2,131,981 | 469,765 | |
| போக்குவரத்து பாவனை மற்றும் ஏனைய சேவைகள் | 1,372,162 | 2,420,876 | 1,048,714 | |
| வட்டி, பங்கிலாப, மிகையூதியக் கொடுப்பனவு | 651,076 | 727,716 | 76,640 | |
| உதவிப் பணம் உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 344,838 | 457,005 | 112,167 | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 448,749 | 514,132 | 65,383 | |
| நிதிசார் விளைவுகளில் நிகர குறைவு | | | | (2,862,761) |
| | | | | (914,694) |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய் சேகரிப்பின் செயற்திறன்

(அ) 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான ஏக்கர் வரி மற்றும் வாராந்தச் சந்தைக் குத்தகை வாடகை நிலுவையில் எதுவுமே 2013 டிசெம்பர் 31 ஆந் உள்ளவாறு அறவிடபடாதிருந்ததுடன் தீர்வை நிலுவையில் 34 சதவீதமும் கற்குழி குத்தகை வாடகையில் 11 சதவீதமும் மாத்திரமே அறவிடப்பட்டமையால் வருவாய் நிலுவையை அறவிடுவதிலான முன்னேற்றம் மிகத் திருப்தியற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்களது பராமரிப்பிற்கான கட்டணத்தை அறவிடுவதற்கு உப விதிகள் அமைக்கப்பட்டு அறவீடு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.2 குத்தகை வாடகை

(i) சபைக்குரிய 6 கடைகளது குத்தகையாளர்கள் 10 மாதங்களுக்கு மேலாக குத்தகை வாடகையைச் செலுத்தாதிருந்தனர். எனினும் குறித்த குத்தகை உடன்படிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அந்நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) சபைக்குரிய தெமோதர கற்குழிகளைக் குத்தகைக்குப் பெற்றவர்களிடமிருந்து முன்னைய ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 383,585 குத்தகை வாடகை நிலுவையை குத்தகை உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 நீர்க் கட்டணம்

சபையால் நடாத்தப்பட்டு பேணப்பட்டு வரும் ஹீல்ஓய நீர்த் திட்டத்தின் கீழான அறவீடு அதன் ஏனைய பராமரிப்புச் செலவினம் தவிர, மின் கட்டணத்தை ஈடு செய்வதற்கேனும்

போதியளவாக இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டதுடன், சபைக்குரிய ஏனைய நீர்த் திட்டங்களது கட்டண அறவீடும் திருப்தியளிப்பதாக இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமனற்த் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமுமாக அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 2,457,828 ஆகும். விபரம் வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 675,857 |
| முத்திரைக் கட்டணம் | 1,781,971 |

### 2.3.5 பிற வருவாய்

2012 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1790 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்மூலம் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படும் சுற்றுலாச் சபையின் பதிவு செய்யப்பட்ட தங்குமிட வசதிகளைக் கொண்ட ஹோட்டல்களிலிருந்து அவற்றினது குறித்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டினது வருவாயில் 01 சதவீதத்திற்கு மேற்படாத கட்டணம் அறவிடப்பட வேண்டுமென சபை அறிவித்திருந்தபோதும், எல்ல நகரத்தில் அமைந்துள்ள தங்குமிடங்களிலிருந்து அவ்வாறு கட்டணம் அறவிடப்படாதிருந்தது.

## 3. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கென சபையால் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தை உள்ளவாறான தகவுகளுடன் கணக்கிணக்கஞ் செய்தபோது குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டம்
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்